உ
முருகன் துணை

# தேவராய சுவாமிகள் அருளிய கந்தர் சஷ்டி கவசம்

## வித்துவான் ஈக்காடு சபாபதி முதலியார் எழுதிய பதவுரையுடன்

### முகவுரை

கந்தர் சஷ்டி கவசமானது, அடியார்கள் பலரும் குமாரக்கடவுளைத் துதித்துப் பேய், பில்லி, சூனியம், பிணி, பகை முதலியவற்றால் ஏற்படும் சகல துன்பங்களினின்றும் நீங்கிச் செல்வம், மக்கட்பேறு, தீர்க்காயுள், நற்பதவி முதலியவைகளையும், குமாரக்கடவுளின் பேரருளையும் பெற்று உய்வதற்கு உறுதுணையாய் இருக்கும் பொருட்டு, தேவராய சுவாமிகளால் திருவாய் மலர்ந்து அருளப்பட்டது. இத்தகைய மகத்துவம் வாய்ந்த கவசத்தைக் குகனடியார்கள் பலரும் பக்தி சிரத்தையோடு பாராயணம் செய்து அதனால் தாங்கள் முழுமுதற் கடவுளாம் முருகப் பெருமானின் பேரருளையும், உலக நலன்களையும் பெற்று வருகின்றனர். சாதாரணமான உடற்கவசங்கள் போல் அல்லாமல், இக்கவசமோ இகத்தில் உடலைக் காத்தல் மாத்திரமன்றி, பரத்திலே முக்தியையும் அளிக்கவல்லது. எனவே, இகபரமிரண்டிலும் உறுதுணையாய் விளங்குவது. இத்தகைய சிறந்த நூலுக்குச் சகலரும் விளங்கும் படியான முறையில் ஈர்காடு சபாபதி முதலியார் விளக்கம் எழுதியுள்ளார். இதனை முருகன் அடியார்களின் நலன் கருதி வெளியிடுகிறோம்.

கலாநிதி இ. ஸ்ரீஇரவீந்திரராஜா
கல்விப் பொறுப்பாளர், சைவமன்றம், அவுஸ்திரேலியா, 2001

உ
முருகன் துணை

## கந்தர் சஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குற்றமற்ற கடவுளாகிய சிவபெருமான் தன்னருளாலே பெற்றருளிய சுப்பிரமணியக் கடவுளைப் பற்றிய, ஆறாந்திதியாகிய சஷ்டியில் ஓதத்தகுந்த இந்தக் கவசத்தைத் தோத்திரம் செய்து வணங்குவோர்க்கு கொடிய தீவினைகள் எல்லாம் தொலைந்து போகும், வருத்தங்கள் எல்லாம் நீங்கும், மனதிலே இருத்தி வைப்போர்க்கு இம்மை, மறுமைச் செல்வங்கள் உண்டாகி, மிகுந்து பெருகும், சமாதி நிஷ்டையும் சித்திக்கும்.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

மனமே! தேவர்களுடைய துன்பமானது நீங்கும்படி யுத்தம் புரிந்த குமரக்கடவுளுடைய திருவடிகளைத் தியானிக்கக் கடவாய்.

### நூல்

### நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்

சரவணப் பொய்கையில் அவதரித்து அருளியவரும், பக்தி பொருந்திய தொண்டருக்கு உபகாரம் செய்கின்ற சிவந்த கிரணங்களையுடைய வேலாயுதத்தை உடையவனும்,

பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

இரண்டு பாதங்களிலும் பலவகை மணிகள் சேர்க்கப்பட்ட சதங்கை என்னும் ஆபரணமானது இனிமையாகப் பாட்டைப் பாடவும், கிண்கிணி என்னும் ஆபரணமானது அசைய,

மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து

பார்ப்பவர்களுக்கு விருப்பம் உண்டாக்கத்தக்க திருநடனம் புரிகின்ற மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்டு அருளியவராகிய முருகப் பெருமானார் என் முன்னே வந்து தோன்றி, தனது திருக்கரத்தில் பொருந்திய வேலாயுதத் தினாலே அடியேனை காக்கக் கடவன் என்று கருதி, சஷ்டி கவசமென்னும் இம்மந்திரத்தை மனத்தால் சிந்திக்க.

வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

வேலாயுதத்தைத் திருக்கரத்தில் ஏந்திய முருகக் கடவுள் அடியேனைத் தடுத்தாட் கொள்ளும் படியாக அடியேன் முன்னே வந்தருளுக, வந்தருளுக. மயிலைத் தனக்கு வாகனமாகக் கொண்ட குமாரக்கடவுள் வந்தருள்புரிக, வந்தருள்புரிக, வந்தருள்புரிக.

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

இந்திரன் முதலாக எட்டுத் திக்குகளிலுள்ள பாலகர்களும் துதிக்க, மந்திர சக்தியையுடைய கூர்மை தங்கிய வேலாயுதமானது அடியேனைக் காப்பதற்காக வரக்கடவது, வரக்கடவது.

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக.

தேவேந்திரனுக்கு மருமகனே வந்தருளுக, வந்தருளுக. குறவர்களிடத்திலே வளர்ந்து வந்த வள்ளியின் ஞாபகத்தை உடையவனாகிய முருகக் கடவுள் வந்தருள்க.

ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறுடும் வேலவன் நித்தம் வருக

ஆறு திருமுருகங்களைப் பெற்ற ஐயனே வந்தருள்க. திருநீற்றைத் தம் திருமேனியில் தரித்துள்ள வேலாயுதத்தை உடையவனே ஒவ்வொரு நாளும் வந்தருள்க.

சிரகரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

சிராமலையில் வாசஞ் செய்கின்ற வேலாயுதத்தைத் தரித்த முருகக் கடவுளே விரைவாக வந்தருள்க. நாணற்காடாகிய சரவணப் பொய்கையிலே திருவவதாரஞ் செய்த கடவுள் சீக்கிரமாக வந்தருள்வாராக.

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக

ரவணபவச ரரரர ரிவணபவச ரிரிரி விணபவ சரவண என்று பலவகையாக மாறி வரப்பட்ட சடாச்சர முதலிய எழுத்துகளின் மூலப் பொருளும் வடிவுமாகிய சூரபதுமன் முதலியவர்களை வென்ற வீரத்தன்மை உடையவனே! உனது மேலான காரியங்களுக்கும் உனக்கும் வணக்கம். நிபவ சரவண என்னும் எழுத்துகளின் சொரூபமானவனே! வசர வணப என்னும் சொரூபமான முருகனே! நீ மயில் வாகனத்தின் மேல் ஆரோகணித்தருளி வேகமாக வருவதால் நிற நிற நிற என்னும் ஓசை உண்டாகும்படி வந்தருள்க, வந்தருள்க. தேவர்களுக்குப் பகைவராகிய சூரபதுமன் முதலிய அசுரர்களுடைய குடும்பங்களை அடியோடு நாசப்படுத்திய ஐயனே வந்தருள்வாயாக.

என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக.

அடியேனை காத்தருளுகின்ற இளைய குமாரனும், வேலாயுதத்தைத் திருக்கரத்தில் ஏந்தியருளியவனுமான முருகன் பன்னிரண்டு திருக்கரங்களிலும் பன்னிரண்டு என்னும் வகையினையுடைய ஆயுதங்களும், பாசம் என்னும் ஆயுதமும், அங்குசம் என்னும் ஆயுதமும், விசாலமான பன்னிரண்டு என்னும் எண்ணுள்ள திருநேத்திரங்களும் பிரகாசத்தைச் செய்ய அடியேனை துன்பக் கடலில் துளைய விடாது காத்தருளும் பொருட்டு அதிசீக்கிரமாக வந்தருளுவாயாக.

ஐயங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்

இவ்விரண்டு பீஜங்களும் முறைமையுடனே சௌவென்னும் பீஜத்தையும், பிழைத்தற்கு ஏதுவான பிரகாச வடிவான சௌவும், பிராணாதாரமான ஐயம், கிலி என்னும் பீஜமும். (பீஜம் – விதை)

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக

கிலியும் சௌவும் ஆகிய இவ்விரண்டு பீஜங்களும் விளங்கா நின்ற சோதி வடிவான ஐயெனும் பிஜமும், நிலையாகி அடியேன் எதிரில் தினந்தோறும் பிரகாசிக்கின்ற ஆறுமுகம் என்னும் பெயர் உருவமும் தீயும், ஒப்பற்ற பிரகாசமுடைய ஒவ்வென்னும் பீஜமும், சத்தியுருவமான மூலாதாரமும் ஆகிய சிவபெருமான் குமாரனாகிய குகப்பெருமான் ஒவ்வொரு நாளும் வந்தருளுக.

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறுடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்

ஆறுவகைப்பட்ட திருமுகங்களும், அணி பொருந்திய கிரீடங்கள் ஆறும், வீபூதி அணியப் பெற்ற திருநெற்றிகளும், நீளமான பன்னிரண்டு

புருவங்களும், பன்னிரண்டு திருக்கண்களும், பவளம் போன்ற நிறத்தினையுடைய சிவந்த ஆறு திருவாய்களும், நல்ல ஒழுங்கையுடைய ஆறு நெற்றிகளிலே ஒன்பது வகை இரத்தினங்களாற் செய்யப்பட்ட சுட்டியும் (குழந்தைகளின் நெற்றிமுகப்பில் மயிர்சீவிக் கட்டுவதோர் ஆபரணம்)

ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்

பன்னிரண்டு திருச்செவிகளிலும் விளங்கா நின்ற குண்டலங்களும், பன்னிரண்டென்னும் வலிமை கொண்ட புஜத்திலும், அழகு பொருந்திய மார்பினிடத்தும்,

பல்பூ டணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்

பல்வகை ஆபரணங்களும், பதக்கமும், ஆராய்ந்து எடுத்த அருமணிகள் வைத்துப் பதித்த நவரத்தினங்களால் செய்யப்பட்ட மாலையும் அழகாய் அணிந்து, மூன்று புரிகளைக் கொண்ட பூணூலும், முத்துச்சரத்தை அணிந்த திருமார்பும், புகழ்ந்து கூறத்தக்க பேரழகை உடைத்தாகிய மேன்மையாகிய திருவயிறும் கொப்பூழும்,

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க

அசையும் இயல்புடைய இடுப்பிலே பிரகாசிக்கின்ற ஜோதியையுடைய பட்டாடையும் நவரத்தினங்களைப் பொருத்தியுள்ள நல்ல கவசமும், இரண்டாகிய தொடைகளின் சௌந்தரியமும், இரண்டாகிய முழந்தாளின் அழகும், அழகிய பாதத்தில் சிலம்பெனும் ஆபரணச் சத்தம் சப்திக்கவும்,

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

பூமியிற் சேர்ந்திருப்பவனே! பூமியிற் சேர்ந் திருப்பவனே! பூமியிற் சேர்ந்திருப்பவனே! பூமியிற் சேர்ந்திருப்பவனே! மொகமொக மொகமொக மொகமொக மொகென நகநக நகநக நகநக நகென டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண ரரரர ரரரர ரரரர ரரர ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி டுடுடு டுடுடு டுடுடு டுடு டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு, எல்லாவற்றிற்கும் மூலமான தாதுவே! தாதுவே! மயில்வாகனத்தை உடையவனாகிய தாதுவே! முருகனாகிய வேளே! அடியேனைக் காக்கும் பொருட்டு அடியேன் முன்னே முற்படுவாய்! முற்படுவாய்! முற்படுவாய்!

என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேகமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க.

அடியேனாகிய என்னை காத்தருளிய திருவேரகம் என்னும் தெய்வஷேத்திரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பாக்கியசாலியே! உன் குமாரனாகிய அடியேன் விரும்பிக் கேட்கின்ற வரங்களைச் சந்தோசித்து கொடுக்கின்ற லாலா லாலா லாலா என்று பக்த கோடிகள் அனவரதம் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளதாகிய ஒருவகை குதூகலாவேசமும், பலவிதமான திருவிளையாடல்களும் பொருந்திய விசித்திரத்தையுடையவனே என்று சொல்லித் துதித்து தேவரீருடைய அழகிய பாதங்களை நிச்சயமென்று நினைக்கும் அடியேனுடைய தேவரீருடைய உபய திருத்தாள்களையும் பொருத்தியருளி காத்தருள் புரிவாயாக.

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க

அடியேனுடைய பிராணனுக்கும் உயிராய் இருக்கின்ற முருகக் கடவுளே! அடியேனைக் காத்தருள் புரிக. உனது பன்னிரண்டு திருநேத்திரங்களாலும் தேவரீர் புதல்வனாகிய அடியேனைக் காத்தருள்வாயாக. அடியவனாகிய என்னுடைய முகத்தை தேவரீர் திருக்கரத்தில் ஏந்திய அழகமைந்த வேலாயுதமானது காக்கக் கடவது. வீபூதி தரிக்கின்ற நெற்றியை பரிசுத்தமுள்ள அவ்வேலாயுதமே காக்கக் கடவது.

கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

பிரகாசம் பொருந்திய வேலாயுதமானது அடியேன் கண்களைக் காக்கக் கடவது. கல்வி, கேள்வி அறிவுடைய அல்லது பிரமனால் படைக்கப்பட்ட இரண்டு செவிகளையும் வேலாயுதத்தைத் தரித்தவரே! காத்தருளுக. இரண்டு மூக்குத் துவாரங்களையும் நன்மை புரியும் வேலாயுதமானது காக்கக் கடவது. தேவரீருடைய துதிகளையே சதா சர்வகாலமும் பன்னிப் பன்னிப் பேசிய வாயை, பெருமை பொருந்திய வேலாயுதமானது காக்கக் கடவது.

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

அடியேனுடைய முப்பத்திரண்டு பற்களையும் போர் செய்தலையுடைய வேலாயுதமானது காக்கக் கடவது. தேவரீர் துதிகளைக் கூறிய நாக்கை தேவரீரது சிவந்த வேலாயுதமானது காக்கக் கடவது. அடியேனுடைய கன்னம் இரண்டையும் கிரணங்களையுடைய வேற் படையானது காக்கக் கடவது. அடியேனது இளமையான கழுத்தை சந்தோஷமிகுந்த வேலாயுதமானது காக்கக் கடவது.

மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க

நெஞ்சை இரத்தினங்கள் இழைக்கப்பட்ட கூர்மை தங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது. பொருந்திய இளமையான தனங்கள் இருக்கின்ற இரண்டு பக்கத்து இரண்டு மார்பு ஸ்தானங்களையும் அழகிய வேலாயுதமானது காக்கக் கடவது. கூர்மை பொருந்திய வேலாயுத மானது இரண்டு தோள்களையும் வளமை உண்டாக்கும்படி காக்கக் கடவது. இரண்டு பிடரிகளையும் பெருமையுடைய வேலாயுதமானது காக்கக் கடவது.

அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க

முதுகின் பாகத்தை அழகாக கிருபை தங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது. பதினாறு விலா எலும்புகளையும் பருத்த வேலாயுத மானது காக்கக் கடவது. வெற்றியையுடைய வேலாயுதமானது அடியேன் வயிற்றை நோயில்லாமல் சுகத்துடன் பிரகாசிக்க காக்கக் கடவது. சிறுத்த இடையை மேன் மேலும் அழகுண்டாகும்படி சிவந்த வேலாயுதமானது காக்கக் கடவது.

நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க

கருவுற்பத்திக்குக் காரணமாகிய நரம்பு போலும் கயிற்றினை நன்மையுடைய வேலாயுத மானது காக்கக் கடவது. ஆண் பெண் குறிகளையும் கூர்மை தாங்கிய வேலாயுத மானது காக்கக் கடவது.

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க

இரண்டு ஆசன பாகங்களையும் தேவரீரது பெருமை பொருந்திய வேலாயுதமானது காக்கக் கடவது. வட்டமான ஆசன வாயிலை வலிமை தாங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது.

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கான் முழந்தாள் கதிர்வேல் காக்க

திரண்ட இரண்டு தொடைகளையும் பெரிய வேலாயுதமானது காக்கக் கடவது. இரண்டு கணைக்கால்களையும், இரண்டு முழந்தாள் களையும் பிரகாசம் பொருந்திய வேலாயுத மானது காக்கக் கடவது.

ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்னை யிரண்டும் பின்னவ ளிருக்க

ஐந்து விரல்களையுடைய இரண்டு அடிகளையும் கிருபை தங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது. இரண்டு கைகளையும் அருள் நிறைந்த வேலாயுதமானது காக்கக் கடவது. இரண்டு கெண்டைக் கைகளையும் வலிமை கொண்டுள்ளதாகிய வேற்படையானது காக்கக் கடவது. இரண்டு பின்னங்கைகளிலும் இளையவளாகிய இலக்குமி வசித்திருப்பாளாக.

நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

நாக்கினிடத்திலே கலைமகள் நல்ல துணையாகப் பொருந்துவாளாக. உந்தித் தாமரையை நல்ல வேலாயுதம் காத்து அருள்வதாக.

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க

மூன்று வகை நாடிகளான இடைகலை, பிங்கலை, சுழிமுனை ஆகியவற்றை கூர்மை தங்கிய வேலாயுதமானது காக்கக் கடவது. அடியேனை எக்காலத்தும் பகைவரோடு பொருகின்ற வேலாயுதமானது காக்கக் கடவது.

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க

அடியேனுடைய வசனமானது நாவில் அசைந்து வெளிப்படும் போது பொன்மயமாகிய வேலாயுதமானது விரைந்து வந்து காக்கக் கடவது.

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

நாடோறும் வருகின்ற பகற்காலத்தில் அடியேனை வயிரம் பொருந்திய வேலாயுத மானது காக்கக் கடவது. பாதிராத்திரியில் அப்படிப்பட்ட வயிரம் பொருந்திய வேலாயுதமே காக்கக் கடவது.

ஏமத்திற் சாமத்திற் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க

முன்னிரவு நேரத்திலும் நடுராத்திரியிலும் பகைவர்களுடன் எதிர்க்கின்ற வேற்படையானது காக்கக் கடவது. தாமதத்தைப் போக்கி திறமையையுடைய வேலாயுதமானது காக்கக் கடவது.

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

ஒரு நொடிப் பொழுதிலே அடியேனை பொன் மயமான வேலாயுதமானது காக்கக் கடவது, காக்கக் கடவது, காக்கக் கடவது. அன்புடனே அடியேன் பக்கம் நோக்கக் கடவது, நோக்கக் கடவது, நோக்கக் கடவது.

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட

அடியேன் செய்த பாவங்கள் தூளாக நாசமடைய அதனைக் கோபத்துடன் நோக்கக் கடவது, நோக்கக் கடவது. சிறிதும் தடையில்லாமல் அடித்துத் தாக்குக, அடித்துத் தாக்குக, அடித்துத் தாக்குக.

பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்

பகைவர்கள் ஏவிவிடும் பில்லி என்னும் ஒருவகைப் பேயும், மரணவித்தையும், பெரு விரோதங்களும் என்னிடம் வந்து அடையாமல் அப்புறம் ஓடிப்போகவும், வலிமையான பூதங்களும் பலம் பொருந்திய பிசாசுகளும்,

அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்

மனிதர்களைத் துன்பத்திற்கு உட்படுத்துகின்ற கட்டுப்படாத முனியின் வர்க்கங்களும், இளங் குழந்தைகளைக் கொன்று சாப்பிடும் வீட்டின் பின்புறத்திலே இருக்கும் முனிகளும்,

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்

நெருப்பை வாயிலேயுடைய பிசாசுகளும், குள்ளமான பேய்களும், வாலிபப் பருவ மாதர்களைக் கண்டு விடாமல் பின்பற்றும் பிரமராட்சதப் பேய்களும்,

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்

இரிசி என்னும் ஒருவகையான பெண் பேயும், காட்டேரி என்னும் துஷ்ட தேவதையும், இத்துன்பம் பொருந்திய பேய்ப் படைகளும் அடியேனைப் பார்த்தால் பயந்து கலக்கம் அடைந்து பற்றினவரை விட்டு ஓடவும்,

எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்

பகற்காலத்திலும், இராக்காலத்திலும் எதிரிலே வந்து தோன்றுகிற அண்ணர்களென்ற தேவதைகளும், மிகுதியான விசேட பூசைகளைக் கொள்ளுகின்ற காளிகா தேவியோடு சேர்ந்த மற்றப் பரிவாரங்களாகிய தேவதைகளும்,

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்

கொல்லுகின்ற ஆங்காரம் உடையவர்களாகிய பூதர்களும், இன்னும் இருக்கின்ற அநேகம் பிசாசுகளும், சிவிகை மேலேறி வரக்கூடிய பூதர்களும், புலைத்தன்மை வாய்ந்த பேய்களும்,

என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

யானைகள் கட்டியிருக்கும் இடத்தில் அதனடிக்குக் கீழே புதைக்கப்பட்ட அருமையான மாப்பிரதிமைகளும் என்னுடைய பெயரைச் சொன்னவுடனே இடியானது மேலே வீழ்ந்தது போலக் கலக்கம் உண்டாக பயந்து ஓடவும்,

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்

பூனைகளுடைய உடல் உரோமமும், தலைப் பிள்ளைகளினுடைய எலும்பும், நகங்களும், அப்பிள்ளைகளின் உரோமமும், நீண்ட மயிர் முடியையுடைய தலையும்,

பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

பல மாப்பதுமைகளுடனேயும், பலவகை மட்பாண்டங்களுடனேயும் வாழும் வீட்டில் புதைத்து வைத்த வஞ்சனையாகிய மாரணச் செய்கையும்,

ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்

அடியேனுக்குக் கெடுதி செய்பவர்கள் கற்று உணர்ந்திருந்தும் ஒட்டியம் என்னும் மாந்திரீக நூலால் ஏற்பட்ட அகங்காரமும், ஒட்டியம் என்னும் மாந்திரீக நூலில் சொல்லும் முறைப்படி அடியேனைக் கெடுத்தற்காகவே செய்து மந்திரஉரு ஏற்றப்பட்ட மாப்பதுமையும், திரவியங்களையும், பலியுடனே பலி இரத்தத்திற் புரட்டிய சோறும்,

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

அந்த ஒட்டிய நூலில் விதித்திருக்கின்ற மந்திர மையும், தனிவழியிற் போகுமாறு பகைவர் செய்தலாகிய தொழிலும் அடியேனைப் பார்த்தால் கஷ்டமடைந்து சிதைந்து தொலையவும்,

மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட

பகைவனும், வஞ்சனை செய்யும் வஞ்சகர்களும், காலத்தைக் கணக்கிட்டு உயிரைக் கவர்ந்து கொண்டு போக வருபவர்களான எமதுாதர்களும், அடியேனைப் பார்த்தால் அடியேன் முன்பாக வந்து வணங்கவும், மனந்திடுக்கிடவும்,

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட

பயந்து நடுங்கிடவும், பிரமித்து கீழே விழுந்து புரளவும், வாயைத் திறந்து கதறி அறிவிழந்து ஓடவும்,

படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுட லங்கம் கதறிடக் கட்டு

பூமியிலே மோதிக் கொள்ளவும் பாசமாகிய கயிற்றால் கட்டக் கடவாய். உடனே அவயவங்கள் அழும்படி கட்டக் கடவாய்.

கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

காலும் கையும் ஒடியவும் அவ்வருத்தத்தால் வாய்விட்டுக் கதறியழவும் பாசத்தாலே இறுகக் கட்டக் கடவாய், கட்டக் கடவாய், கட்டக் கடவாய். மேலே சொன்ன பிரகாரம் உருட்டி விடக் கடவாய்.

முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக

கண்கள் இரண்டும் வெளியில் புறப்பட்டு வந்து வருந்த, குத்து குத்து, உடம்பு பொருக்குப் பொருக்காய் உதிரும்படியாக கொல்லு கொல்லு.

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

அழகானவனே! அழகானவனே! சூரபதுமனுக்குப் பகைவனான அழகானவனே! மிகுந்த கூர்மை உடைய தேவரீர் திருக்கை வேலால் இடி இடி.

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக,

கையினாலே பிடிப்பாயாக, பிடிப்பாயாக. பகலை வளங்கும் சூரியனிலுள்ள அத்தழல் உருவாகும்படி தழலால் எரிக்கக் கடவாய், தழலால் எரிக்கக் கடவாய், தழலால் எரிக்கக் கடவாய்.

விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க

அடியேனைக் கொல்லும்படியாக வரும் புலி என்னும் துஷ்ட மிருகமும் அடியேனைப் பார்த்துப் பயமடைந்து ஓடிவிடும்படியும், பெரு நரியும், சிறிய நரியும், நாய்களும், எலிகளும், கரடிகளும் இனிமேல் பயம் கொண்டு ஒன்றன் பின்னே ஒன்று விடாமல் பின்பற்றி ஓடவும், தேள்களும், பாம்புகளும், செய்யான்களும், பூரான்களும் கடித்தலையுடைய இடத்திற் றங்கிய விஷங்களும், பற்களாலே கடித்து உயர்ந்த உடலில் தலைக்கு ஏறிய விஷங்களும் மிகச் சுலபமாய் உடனே இறங்கி விடவும் வேலாயுதத்தை ஏவிவிடக் கடவாய், ஏவிவிடக் கடவாய்.

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்,

உருவம் தெரியாதபடி மறைக்கும் மறைப்பும், நரம்பு பிசகுதலும், ஒரு பக்கத் தலைவலியும், வாயு சம்பந்தமான வியாதியும், குளிர்

வியாதியும், கை கால் முதலிய இழுப்பு வியாதியும், பித்த சம்பந்தமான வியாதியும், சூலை வியாதியும், கசரோகமும், குன்ம வியாதியும், சோர்வை உடைய சிரங்கு வியாதியும், கை கால் குடைச்சலும், சிலந்தி வியாதியும், குடலில் வரும் சிலந்தி நோயும், விலாப் புறங்களில் வரும் பிளவையும், மேலும் மேலும் பரவுதலையுடைய தொடை வாழை வியாதியும், கடுவான் என்னும் ஒருவகை கரப்பான் வியாதியும், படுவன் என்னும் வியாதியும், கையிலும் காலிலும் தோன்றும் சிலந்திகளும், பல்லில் வரும் குத்தும், பல்லரணையும், பெரிய அரைகளிலே வருகின்ற அரையாப்புக்கட்டி என்னும் வியாதியும் முதலிய சமஸ்தமான வியாதிகளும் என்னைப் பார்த்தவுடனே நிற்காமல் ஒழிந்து போக முருகக் கடவுளே தேவரீர் அடியேனுக்குக் கருணை புரிவீராக. பதினான்கு உலகங்களும் எனக்கு சிநேகமாகவும், ஆண்களும், பெண்களும் ஆகிய சமஸ்தமான பேர்களும், பூமியை ஆளுகின்ற அரசர்களும் என் பொருட்டு சந்தோஷித்து சிநேகம் கொள்ளவும்,

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே

நாணற் காடாகிய சரவணப் பொய்கையில் உற்பத்தியானவனே! மலைகளிலே தங்குகின்ற பிரகாசத்தையுடைய கடவுளே! தேவரீரைத் துதிக்க தேவரீர் அழகிய திருநாமங்களாகிய,

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே

முப்புரத்தையும் எரித்த சிவபெருமானை ஒத்தவனே! விளங்குகின்ற பிரகாசம் தங்கினவனே! பாதச் சிலம்பை அணிந்த மேன்மை உடையவனே! பிறப்பானது மறையத்தக்க சத்தியை உடையவனே!

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்

விஷ்ணுக்கும் இலக்குமிக்கும் மருமகனே! தேவர்கள் வாழும் தேவலோகத்தை காப்பாற்றி அத்தேவர்களுடைய கொடிதான சிறைச் சாலைத் துன்பத்தை நீக்கியருளினாய்.

கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா.

கந்தனே! குகப்பெருமானே! கிரகணங்களை உடைய வேலாயுதத்தை உடையவனே! கார்த்திகை மாதர்களாகிய ஆறு பெண்களாலே வளர்க்கப்பட்ட புதல்வா! கடம்ப மலர் மாலையைத் தரித்தவனே! கடம்பனையும் இடும்பனையும் நாசஞ் செய்த நன்மை செய்யும் வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கிய முருகனே! திருத்தணிகை மலையில் எழுந்தருளி இருப்பவனே! சிவபெருமான் திருக்குமாரனே!

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா

ஈழநாட்டிலுள்ள கதிர்காமம் என்னும் திவ்ய சேத்திரத்தே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற கிரணங்களையுடைய வேற்படையைத் தரித்தருளிய முருகக்கடவுளே! பழநி என்னும் திவ்யசேத்திரத்திலே வாழ்கின்ற பால வயதுடைய குமாரக்கடவுளே!

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா,

திருவாவினன் குடியிலே வாழ்கின்ற அழகான வேலாயுதத்தை உடையவனே! திருச்செந்தூர் என்னும் திவ்யஷேத்திரத்திலே உள்ள சிறந்த மலையிலே எழுந்தருளி இருக்கின்ற செங்கல் வராயன் என்னும் திருநாமம் பூண்டவனே!

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ளைள்றாய்

சமராபுரி என்னும் திவ்யஷேத்திரத்திலே வாழ்கின்ற ஆறு திருமுருகங்களையுடைய சண்முகன் என்ற திருநாமம் பூண்ட கோவே! மேகநிறம் போலும் கருமை நிறமுடைய கூந்தலை உடையவளாகிய சரஸ்வதியானவள் செம்மையாக,

என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்

என்னுடைய நாக்கில் வீற்றிருப்பதனால் அடியேனை தேவரீரைப் புகழ்ந்து துதிப் பாடல்களைப் பாடவும் தொடர்ந்துள்ள அடியேன் தந்தையாகிய முருகக் கடவுளை,

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

துதித்துப் பாடினேன். மிகுந்த களிப்பாக ஆனந்தமான நர்த்தனம் செய்தேன், ஆடுதல் செய்தேன், ஆடுதல் செய்தேன். திருவாவினன் குடியில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானின் செல்வத்தை,

நேச முடன்யான் நெற்றியி ரணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி,

உலக மாயையின் சம்பந்தமான செய்கைகளின் சம்பந்தத்தை விட்டகன்று பிரியத்துடனே

அடியேன் வீபூதியை நெற்றியில் தரித்துக் கொள்ளவும்,

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க.

தேவரீருடைய திருவருளை அடையவே தேவரீருடைய கிருபையானது என்மீது உண்டாக கிருபையோடு காப்பாற்றக் கடவாய். சோறும் பொன்னும், மிகமிக உண்டாகவும் வேலாயுதத்தைத் தாங்கிய முருகக்கடவுளது செல்வாக்கைப் பெற்று அடியேன் மிக்க பெருமையுடன் வாழக் கடவேனாகவும்.

வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

மயில்வாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருளி வந்தருள் பாலிப்பவனே! வாழக்கடவை, வாழக்கடவை, வாழக்கடவை. தேவரீர் திருக்கரத்தே பொலியும் கூர்மையுள்ள வேலாயுதமானது வாழக்கடவது, வாழக்கடவது, வாழக்கடவது.

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

குறிஞ்சி நிலமாகிய மலையிலே தங்கி இருக்கின்ற பரமகுருவான முருகக்கடவுளே! தேவரீர் மலைகளிலே வாசஞ் செய்கின்ற வேடுவர்களின் வளர்ப்புப் புதல்வியாகிய வள்ளியம்மையாருடனே, வாழ்ந்திருக்கக் கடவை, வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக் கடவை, வாழ்ந்திருக்கக்கடவை, வாழ்ந்திருக்கக் கடவை.

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க,

கோழிச் சேவற் கொடியானது வாழக்கடவது, வாழக்கடவது, வாழக்கடவது, வாழக்கடவது. அடியேனுடைய தரித்திரங்கள் நீங்குவனவாக.

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்,

தேவரீருக்கு அடிமைப்பட்டவனாகிய நான் எவ்வளவு குற்றங்களை செய்தாலும், எவ்வளவு பிழைகளைச் செய்தாலும்,

பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே.

அடியேனைப் பெற்ற தந்தையும் நீயே. அடியேனுக்குக் குருவும் நீயே. குறவர் குடியிலே வளர்ந்த வள்ளியம்மையாரே, அடியேனைப் பெற்றெடுத்த தாயாருமாவாள், தாயாருமாவாள். ஆதலால் பொறுத்தருளுவது தேவரீர் கடமையாகும்.

பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்

மேலே கூறிய பிரகாரம் அடியேன் தேவரீருக்கு புத்திரனாக அமைத்தபடியினாலே தேவரீர் அடியேனை குமாரனென்று கருதி, புதல்வனாகிய அடியேன் மேல் தேவரீர் திருவுளம் மகிழ்ச்சி கொண்டருளி அன்பாகி அடியேன் வேண்டி விரும்பி வேண்டுபவைகளை கிருபையால் வழங்கி,

தஞ்சமென் றடியர் தழைத்திட வருள்வாய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய,

கந்தசஷ்டி கவசமாகிய இம்மந்திரத்தை பக்தியோடு விரும்பிப் படித்தவர்களும், துணையென்று தேவரீரை வந்தடைந்தவர்களுமாகிய குகனடியார்கள் செழித்து வளரும்படியாக கிருபை செய்யக் கடவாய்.

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்

முருகக்கடவுளுக்கு புதல்வனாகிய தேவராயன் என்னும் பெயருடைய அடியேன் கூறிய இத்தோத்திரத்தை தினந்தோறும் நல்வாழ்வு பெறுதல் வேண்டும் என்னும் எண்ணத்துடன் காலைப் பொழுதிலும், மாலைப் பொழுதிலும்,

ஆசா ரத்துடன் அங்கங் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்

ஒழுக்கத்துடனே தேகத்தைச் சுத்தி செய்து கொண்டு பிரியத்துடனே ஒரே மனமாக கந்தர் சஷ்டி கவசமென்னும் மந்திரத்தை மனம் கலங்காமல் நாடோறும் சிந்திப்பவர்கள்,

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிக.

ஒரு தினத்திற்கு முப்பத்தாறு உருவீதம் மனத்துட் கொண்டு சொல்லி, செபஞ் செய்து, சந்தோஷித்து, வீபூதியைத் தரித்து முருகக் கடவுளை வணங்கி வழிபாடியற்ற,

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்.

எட்டுத் திசைகளிலும் இருப்பவர்களாகிய சமஸ்தமான சனங்களும் கீழ்ப்படிதலாக எட்டுத் திக்குகளையும் காவல் புரிகின்ற தலைவர்களாகிய எட்டுப் பேர்களும் தங்கள் தங்கள் கிருபையைப் பெருக்கி அருளுவார்கள்.

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்

பகைவர்கள் எல்லோரும் தாமே வந்து வணங்குவார்கள். ஒன்பது கிரகங்களும் சந்தோசித்து நலத்தைக் கொடுக்கும்.

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்.

புதுமையாகிய மன்மதன் என்று சொல்லும்படி நல்ல அழகை அடைவர். எந்தத் தினத்திலும் பதினாறாக நிலைபெற்று வாழ்வார்கள்.

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

கந்தசுவாமியாருடைய திருக்கரத்திலே விளங்கும் வேலாகிய இக்கவசத்தின் ஓரடியை முறைமையாக கண்ணால் கண்டு படித்துவர உண்மை மார்க்கமானது உண்டாகி பிரகாசிக்கும்.

விழியாற் காண வேருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்

கண்களால் பார்த்தவுடனே பேய்கள் பயந்தோடும். கேட்டவர்களைப் பொடி பொடியாக்கச் செய்யும்.

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

நல்லவர்களுடைய எண்ணத்திலே நர்த்தனம் செய்யும் எல்லாப் பகைவர்களையும் கொன்று குவிப்பதாகிய திருவடியாகும்.

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளின்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்

அடியேனுடைய மனமானது தெரிந்து எட்டு வகையான லட்சுமிகளிலே யுத்தத்திலே வீரத்தையும் வெற்றியையும் உண்டாக்கும் வீரலட்சுமிக்கு புதிய உணவாகும்படி,

சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த

சூரபதுமன் என்னும் அசுரனை வெட்டித் துண்டுபடுத்திய கையால் இருபத்தேழு பேருக்கு சந்தோசித்து அமுதத்தைக் கொடுத்தருளிய,

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி

சிவபெருமானுக்கு உபதேசம் செய்த ஆசாரியனும், மோட்சத்தைக் கொடுக்கும் கடவுளும், பழநி என்னும் பெயருடைய திருமலையிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிறுபிள்ளை வடிவம் உள்ளவனாகிய முருகக்கடவுளின் சிவந்த திருவடிகளுக்கு வணக்கம்.

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி.

அடியேனைத் தடைப்படுத்தி அடிமையாக்கிக் கொள்ள அடியேனது மனத்தில் வந்தடைந்த உருவத்தோடு வருகின்ற வேலாயுதனே! தேவரீருக்கு வணக்கம்.

தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

அமரர்களுடைய சேனைகளுக்குத் தலைவனே! தேவரீருக்கு வணக்கம். வேடுவர் வளர்ப்புப் புதல்வியாகிய வள்ளியம்மையாரின் மனம் சந்தோஷக்கும் படியான ஆண்மகனே! தேவரீருக்கு வணக்கம்.

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

வலிமை மிக்க இனிமையான தேகமுடையவனே! வணக்கம். துன்பத்தைச் செய்கின்ற வேலாயுதத்தை உடையவனே! பகைவர் முன்னே காட்டும் செருக்கையுடையவனே! வணக்கம்.

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சியே புனையும் வேளே போற்றி

கடம்ப மலர் மாலையைத் தரித்தவனே! தேவரீருக்கு வணக்கம். கந்தனே! தேவரீருக்கு வணக்கம். வெட்சிப் பூமாலையை தரித்துக் கொண்டு விளங்கும் குமரனே! தேவரீருக்கு வணக்கம்.

உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயிநட மிடுவோய் மலரடி சரணம்.

உயர்ந்த கந்தகிரி மேற்பொருந்திய பொன்னாலான சபா மண்டபத்திற்கு ஒப்பற்ற அரசனே! மயில் வாகனத்தின் மேல் ஆரோகணித்து நர்த்தனம் செய்பவனே! தேவரீருடைய தாமரை போன்ற திருவடிகள் அடியேனுக்குப் புகலிடமாகும்.

சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

ஓம் சரவணபவ என்னும் சடாசரரூபமாகிய ஆறு திருமுகங்களையுடைய கடவுளே! தேவரீருக்கு வணக்கம், வணக்கம், வணக்கம், வணக்கம்.

கந்தசஷ்டி கவசம் உரையுடன் முற்றிற்று.

Please visit the Sydney Murugan website
http://www.sydneymurgan.org.au
for other related publications of the Saiva Manram